செ.வெ. எண்: 50 நாள்: 19.01.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 30.12.2011 அன்று தமிழகத்தை தாக்கிய ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (19.1.2012) தலைமைச் செயலகத்தில் கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. மாநில போக்குவரத்து கழகங்களின் சார்பாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி – 6 கோடியே 85 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்.
2. ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தின் வேந்தர் திரு.வி.ஆர். வெங்கடாச்சலம் – 51 லட்சத்து 11 ஆயிரத்து 1 ரூபாய்.
3. சிவா குழுமத்தின் தலைவர் திரு. சி. சிவசங்கரன் – 2 கோடி ரூபாய்.
4. தஞ்சாவூர், சாஸ்திரா பல்கலைக்கழகத்தின் சார்பில் 1 கோடி ரூபாயும், மாணவர்களின் சார்பில் 12 லட்சத்து 89 ஆயிரம் ரூபாயும், பணியாளர்களின் ஒரு நாள் ஊதியம் 11 லட்சத்து 11 ஆயிரத்து 968 ரூபாயும் வழங்கப்பட்டது.
5. SRM குழுமத்தின் தலைவர் மற்றும் இணை வேந்தர் திரு.ரவிபச்சமுத்து – 50 லட்சம் ரூபாய்
6. கடலூர், ஸ்ரீ வள்ளி விலாஸ் உரிமையாளர் திரு. வி. பாலு அவர்கள் – 25 லட்சம் ரூபாய்
7. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக அதன் செயலாளர் திரு. வி.கே. மாரிமுத்து – 25 லட்சம் ரூபாய்.
8. அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் பி. மன்னர் ஜவகர் மூலம் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் ஊதியம் – 20 லட்சம் ரூபாய்.
9. சென்னை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கர்னல் டாக்டர் ஜி. திருவாசகம் மூலம் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் ஊதியம் – 15 லட்சம் ரூபாய்.
10. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சரத்குமார் – 10 லட்சம் ரூபாய்.
11. தென்னிந்திய திரைப்பட நடிகர் சங்கம் – 5 லட்சம் ரூபாய்.
12. ராஜலஷ்மி கல்வி நிலையங்களின் தலைவர் திரு. எஸ். மேகநாதன் – 10 லட்சம் ரூபாய்.
13. சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வைகைசெல்வன் அவர்களின் ஒரு ஆண்டு ஊதியத்தொகை – 6 லட்சம் ரூபாய்.
14. திருச்சிராப்பள்ளி நகர புரட்சித் தலைவி அம்மா பேரவையின் சார்பாக அதன் செயலாளர் திரு. ஜெ. சீனிவாசன் – 5 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய்.
15. சென்னை, டவர்ஸ் கிளப் சார்பாக அதன் தலைவர் திரு. டி. பரந்தாமன் – 5 லட்சம் ரூபாய்.
16. புரட்சித் தலைவி பேரவைச் செயலாளர் திரு. டி.ஆர். அன்பழகன் – 5 லட்சத்து 200 ரூபாய்.
17. புரட்சித் தலைவி பேரவை துணைச் செயலாளர் திரு. பி.ஆர். நம்பிராஜ் – 5 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய்.
18. திருநெல்வேலி மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றத்தின் இணைச் செயலாளர் திரு. வி. ஜெய்சங்கர் – 4 லட்சத்து 77 ஆயிரத்து 700 ரூபாய்.
19. ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி திரு.ஆர். நட்ராஜ், இ.கா.ப. – 10 ஆயிரம் ரூபாய்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக 12 கோடியே 51 லட்சத்து 78 ஆயிரத்து 869 ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (19.1.2012) அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 19 கோடியே 53 லட்சத்து 55 ஆயிரத்து 646 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்:19.1.2012